முதலமைச்சரின் 'Speaking for India' பார்த்தேன்!

நெருப்பு வாதங்கள் சத்தியத்தின் குரலாய் ஒலிக்கின்றன!

கவிப்பேரரசு வைரமுத்து வாழ்த்து

முதலமைச்சரின்
Speaking for India
ஒளிக்காட்சி பார்த்தேன்

முரசொலிக்கும் குரலில்
ஆணியடிக்கும் கருத்துக்களை
சாணைபிடித்த மொழியில்
சாற்றுகிறார்

நெருப்பு வாதங்கள்
சத்தியத்தின் குரலாய்
ஒலிக்கின்றன

ஒரு மாநிலத் தலைவர்
தேசியத் தலைவராகும்
பரிணாமம் பார்க்கிறேன்

வளர்கிறார் தளபதி!
வாழ்த்துகிறேன்

- கவிப்பேரரசு வைரமுத்து

ரோவர் எடுத்த லேண்டரின் முப்பரிமாண படம்!



புதுடெல்லி, செப். 7 - நிலவின் மேற்பரப்பில் உள்ள லேண்டரின் முப்பரிமாண படத்தை இஸ்ரோ வெளியிட்டுள்ளது. இந்தப் படத்தை நிலவில் ஆய்வுகளை மேற்கொண்டுவரும் ரோவர் எடுத்துள்ளது.

இது தொடர்பாக இஸ்ரோ வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், நிலவின் மேற்பரப்பிலுள்ள லேண்டரின் முப்பரிமாண படம் கிடைத்துள்ளது.

எலக்ட்ரோ ஆப்டிக் முறையில் மேம்படுத்தப்பட்ட 'நவ்கேம் ஸ்டீரியோ' தொழில்நுட்ப வகையைச் சேர்ந்த இந்தப் படத்தில் இடது, வலது என முப்பரிமாணங்களையும் ரோவர் படம்பிடித்துள்ளது.

இந்த முப்பரிமாண படத்தில் சிவப்பு நிறம் இடதையும், நீலம் மற்றும் பச்சை நிறம் வலதையும் குறிக்கிறது. இந்த இரு நிறங்களுக்கு இடைப்பட்ட வேறுபாடு முப்பரிமாணத்தைக் குறிக்கிறது. முப்பரிமாண கண்ணாடியில் இந்தப் படத்தைக் காணலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தி.மு.கழகத்தை தங்களது உழைப்பாலும், தியாகத்தாலும் வளர்த்த மூத்த முன்னோடிகள் 1600 பேருக்கு தென்காசி தெற்கு மற்றும் வடக்கு மாவட்டக்கழகம் சார்பில் தென்காசியில் நடைபெற்ற மாபெரும் நிகழ்ச்சியில் – கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலா ரூ.10 ஆயிரம் பொற்கிழி வழங்கினார். அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், மாவட்டச் செயலாளர், ஈ.இராசா எம்.எல்.ஏ., மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன் ஆகியோர் உடனுள்ளனர்.

வரும் டிசம்பர் 17–ஆம் தேதி சேலத்தில் நடைபெறவுள்ள கழக இளைஞர் அணியின் 2–ஆவது மாநில மாநாட்டிற்கு இளைஞரணியினரை ஆயத்தப்படுத்தும் விதமாக தென்காசியில் நடைபெற்ற தென்காசி வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.இராஜா எம்.எல்.ஏ., தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன், தனுஷ் எம்.குமார் எம்.பி. மற்றும் கழக முன்னணியினர் மேடையில் உள்ளனர்.

'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சி. திருவுருவச் சிலைக்கு மரியாதை!

முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் திருவுருவச் சிலை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, செப். 7 - சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரனார் அவர்களின் பிறந்தநாளையொட்டி அவரது திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களின் திருவுருவச் சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் நேற்று முன்தினம் (5.9.2023) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரனார் அவர்களின் 152வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் உள்ள வ.உ.சி அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். மேலும், சென்னை காந்தி மண்டப வளாகத்தில், சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களுக்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலையையும் திறந்து வைத்தார்.

தமிழகத்தின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டி வளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும் அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பை பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னம் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தாய்நாட்டின் விடுதலைக்காகத் தமிழகத்திலிருந்து பங்கேற்ற தலைவர்களில் முதன்மையானவர் வ.உ.சிதம்பரனார் அவர்கள். வ.உசி அவர்களின் சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகளால் ஆத்திரமடைந்த ஆங்கிலேய அரசால் அவருக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, கோவை சிறையில் அடைத்து செக்கிழுக்க வைக்கப்பட்டார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களின் புகழுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில், அன்னாரின் 150வது பிறந்த நாளில் முத்தான 14 அறிவிப்புகளை வெளியிட்டு, அவை சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. நம் தாய்நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட வ.உ.சிதம்பரனார் அவர்களின் பிறந்த நாள் ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் 152வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

2021-2022ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மானியக் கோரிக்கையில், தமிழுக்கும் தமிழக மக்களுக்கும் அயராது உழைத்தவரும், சமூக நீதிக் கோட்பாடுகளுக்குச் சட்டவடிவம் கொடுத்தவருமான, சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களது சேவைகளை நினைவு கூரும் வகையில், அன்னாருக்கு சென்னையில் முழு உருவச்சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சென்னை, மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களின் திருவுருவச் சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்து, அதன் அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.ஆர். ஈஸ்வரன், ஏ.எம்.வி. பிரபாகரராஜா, ஜே.எம். எச். ஹசன் மௌலானா, துணை மேயர் மு. மகேஷ் குமார், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த. மோகன், டாக்டர் ப. சுப்பராயன் அவர்களின் கொள்ளுப் பேரன் மோகன் குமாரமங்கலம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மோடியின் பேச்சும், அவரின் செயல்பாடும் சம்பந்தமில்லாதவை!

பொய் சொல்லி நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது!

"தினகரன்" நாளேடு தலையங்கத்தில் சூளுரை!

தினகரன்
செப்டம்பர் 5, 2023 செவ்வாய்க்கிழமை
ஏமாற்ற முடியாது
'வஞ்சிக்கும் பாஜவை வீழ்த்துவோம், இந்தியாவை மீட்டெடுப்போம்' என்ற தலைப்பில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசும் 'ஸ்பீக்கிங் பார் இந்தியா' ஆடியோ சீரிஸ் நேற்று வெளியானது. இதில், ஒன்றிய அரசின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை ஆதாரப்பூர்வமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வைத்துள்ளார். முக்கியமாக, மாநிலங்களுக்கு நிதி வழங்குவதில் ஒன்றிய அரசு பாரபட்சம் காட்டி வருகிறது. தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீடு மிக குறைவு என்பதுதான் வேதனைக்குரியது. ஒன்றிய அரசின் பேச்சும், அவர்களின் செயல்பாடும் எவ்வித சம்பந்தமும் இல்லாமல் இருக்கிறது. நாட்டில் அனைத்து மாநிலங்களுக்கும் பாரபட்சம் இல்லாமல் நிதியை ஒதுக்குகிறோம் என்று கூறி விட்டு, பாஜ ஆளக்கூடிய மாநிலங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்குவதை ஒன்றிய அரசு வாடிக்கையாக வைத்துள்ளது. அனைத்து மாநிலங்களும் வளர்ச்சி அடைந்

சென்னை, செப். 7 – மோடியின் பேச்சும் அவரின் செயல்பாடு சம்பந்தமில்லை. எனவும் இனி பொய் சொல்லி நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது. வரும் தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்துவோம் என சூளுரைத்துள்ளது.

அது வருமாறு:

'வஞ்சிக்கும் பாஜவை வீழ்த்துவோம், இந்தியாவை மீட்டெடுப்போம்' என்ற தலைப்பில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசும் 'ஸ்பீக்கிங் பார் இந்தியா' ஆடியோ சீரிஸ் நேற்று வெளியானது. இதில், ஒன்றிய அரசின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை ஆதாரப்பூர்வமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வைத்துள்ளார். முக்கியமாக, மாநிலங்களுக்கு நிதி வழங்குவதில் ஒன்றிய அரசு பாரபட்சம் காட்டி வருகிறது. தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீடு மிக குறைவு என்பதுதான் வேதனைக்குரியது. ஒன்றிய அரசின் பேச்சும், அவர்களின் செயல்பாடும் எவ்வித சம்பந்தமும் இல்லாமல் இருக்கிறது.

நாட்டில் அனைத்து மாநிலங்களுக்கும் பாரபட்சம் இல்லாமல் நிதியை ஒதுக்குகிறோம் என்று கூறி விட்டு, பாஜ ஆளக்கூடிய மாநிலங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்குவதை ஒன்றிய அரசு வாடிக்கையாக வைத்துள்ளது. அனைத்து மாநிலங்களும் வளர்ச்சி அடைந்தால் தான் நாடு வல்லரசு என்ற இலக்கை அடைய முடியும் என்பதை ஒன்றிய அரசு புரிந்து கொள்ள வேண்டும். நாடாளுமன்ற தேர்தலின் போது ஒன்றிய அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. சாதனைகளை சொல்லி நாட்டு மக்களிடம் வாக்கு கேட்க ஒன்றிய அரசு பயப்படுகிறது.

தங்கள் ஆட்சியில் மக்கள் செழிப்பாக உள்ளதாக ஒன்றிய அமைச்சர்கள் அவ்வப்போது கூறி வருகின்றனர். ஆனால், உண்மையில் நிலைமை தலைகீழாக உள்ளது தான் வேதனைக்குரியது. 'நாங்கள் நன்றாக இருக்கிறோம்' என நாட்டு மக்கள் சொல்லவில்லை என்பதை ஒன்றிய அரசு தெரிந்து கொள்ள வேண்டும். பாஜ ஆளக்கூடிய மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்தும், அம்மாநிலங்களால் சிறப்பு மிக்க திட்டங்களை கொண்டு வர முடியவில்லை. ஆனால், மிக குறைவான நிதியை ஒன்றிய அரசு ஒதுக்கினாலும், தமிழ்நாடு அரசின் முயற்சியால் நாடே போற்றும் வகையில் பல்வேறு சிறப்பு வாய்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநிலங்களுக்கு நிதி வழங்குவதில் ஒன்றிய அரசு பாரபட்சம் காட்ட கூடாது. இதனால் மாநிலங்களின் வளர்ச்சி பாதிக்கப்படும். முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை கொண்டு வருவதில் காலதாமதம் ஏற்படும். இதனால் மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். நாட்டில் அனைத்து மாநிலங்களையும் சரிசமமாக பார்ப்பதாக கூறி விட்டு, தங்கள் கட்சி ஆளக்கூடிய மாநிலங்களுக்கு முன்னுரிமை அளிப்பது உள்ளிட்ட விஷயங்களில் ஒன்றிய அரசு இறங்குவது நல்லதல்ல. குறிப்பாக, பாஜ ஆளாத மாநிலங்களுக்கு பல்வேறு வகையில் ஒன்றிய அரசு நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது. இதை நாட்டு மக்கள் உன்னிப்பாக கவனித்து வருகின்றனர். ஒன்றிய அரசின் ஒவ்வொரு செயல்பாடுகளையும் மக்கள் பார்த்து வருகின்றனர். எனவே மக்களை ஒன்றிய அரசால் ஏமாற்ற முடியாது.

கடந்த காலங்களில் தேர்தல் நேரத்தில் ஒன்றிய அரசால் நடத்தப்பட்ட நாடகங்களை மக்கள் பார்த்துள்ளனர். செய்ய முடியாத திட்டங்களை ஒன்றிய அரசு அறிவித்து பொதுமக்களை ஏமாற்றியதை இன்னும் அவர்கள் மறந்து விடவில்லை. இனி, மக்களை ஏமாற்ற முடியாது என்பது ஒன்றிய அரசுக்கு நன்றாக தெரிந்து விட்டது. ஆகையால், வரும் நாடாளுமன்ற தேர்தலில் ஒன்றிய அரசு பல தில்லாலங்கடி வேலைகளில் இறங்கினாலும் ஆச்சரியமில்லை. பாஜ அரசு ஆட்சிக்கு வந்து 10 ஆண்டுகள் ஆகப்போகிறது. தாங்கள் செய்த திட்டங்களை சொல்லி வாக்கு கேட்க முடியாத நிலையில் ஒன்றிய அரசு உள்ளது. நாட்டுமக்கள் தெளிவாக உள்ளனர். பல்வேறு விஷயங்களில் ஒன்றிய அரசு செயல்பட்ட விதத்தை அவர்கள் மறந்து விடவில்லை. பொய்களை சொல்லி நாட்டுமக்களை ஒரு போதும் ஒன்றிய அரசால், இனி ஏமாற்ற முடியாது.

இவ்வாறு "தினகரன்" தலையங்கத்தில் சூளுரைத்துள்ளது.

குன்றக்குடி அடிகளாரின்

உதவியாளர் ராஜசேகரன் மறைவு!

சிவகங்கை, செப். 7 - தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் உதவியாளர் ராஜசேகரன் அவர்கள் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சிவகங்கை மாவட்டம் குன்றக்குடியில் திருவண்ணாமலை ஆதீன மடம் உள்ளது. தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரின் உதவியாளராக முதுநிலை பட்டதாரி ராஜசேகரன் பணிபுரிந்து வந்தார். வயது 42.

பணியில் இருந்த ராஜசேகரன் திடீரென்று மயங்கி விழுந்தார்.

மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்ற போது அவரை பரிசோதித்த டாக்டர்கள் ராஜசேகரன் இறந்து விட்டதாக கூறினார்.

மறைந்த ராஜசேகரனுக்கு மனைவி, ஒரு மகன், ஒரு மகள், உள்ளார்கள். ராஜசேகரன் உடலுக்கு குன்றக்குடி மடத்தின் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது.

ராஜசேகரனின் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் அரசியல் பிரமுகர்கள் ராஜசேகரன் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள் .

குன்றக்குடியில் நேற்று முன்தினம் பிற்பகல் ராஜசேகரனின் இறுதிச்சடங்குகள் நடைபெற்றன.



பெரம்பலூர் மாவட்ட வாலிபால் சங்கத்தின் இணைச்செயலாளர் வி.எஸ்.தமிழ்ச்செல்வன், சாந்தி ஆகியோர் புதல்வர் பொறியாளர் த.கோகுல்கிருஷ்ணன் – மருத்துவர் வீ.பிரியா ஆகியோரது சீர்திருத்த திருமணத்தை, கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. நடத்தி வைத்தார். இதில் மாவட்ட கழகச்செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, மாநில மருத்துவ அணி துணை செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் செ.வல்லபன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ்.பெரியசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தமுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்டப் பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, ம.ராஜ்குமார், வீ.ஜெகதீசன், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சோமு.மதியழகன், சி.ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

ஆசிரியர் தினமாகிய நேற்று முன்தினம் (05.09.2023) ஆசிரியர் பெருமக்களுக்கு டாக்டர் சர்வப்பள்ளி இராதாகிருஷ்ணன் விருதை அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் வழங்கி கௌரவித்தார்கள். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதிமாறன், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் மோகன், தமிழ்நாடு கல்வியியல் மற்றும் பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா இயக்குநர் முனைவர் க.அறிவொளி, தொடக்கக்கல்வி இயக்குநர் கண்ணப்பன் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.